அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சி

ALL INDIA SAMATHUVA MAKHAL KATCHI



Phone : 044-2814 3306, 2814 3307, fax : 044-4212 4624, e-mail : orsk14@gmail.com


அ.எண் :147/2016
தேதி. :16/09/2016

# விக்னேஷின் தமிழ் உணர்வு – பாராட்டுக்குரியதென்றாலும் தீக்குளித்து உயிரிழந்தது வேதனைக்குரியது சமக நிறுவனத் தலைவர் ஆர் சரத்குமார் அறிக்கை

காவிரி பிரச்சனை தொடர்பாக கர்நாடகத்தில் தமிழர்களின் மீது நடத்தப்பட்டு வரும் தாக்குதலை கண்டித்து நேற்று நாம் தமிழர் கட்சியின் சார்பில் எழும்பூரில் நடைபெற்ற காவிரி உரிமை மீட்பு பேரணியில், மன்னார்குடியை சேர்ந்த விக்னேஷ் என்பவர் தீக்குளித்து உயிரிழந்த சம்பவம் மிகுந்த வேதனைக்குரியது.

2020 ஆம் ஆண்டில் அதிக அளவில் இளைஞர்கள் சக்தி கொண்ட நாடு இந்தியா தான் என்று கருத்துக்கணிப்புகள் தெரிவிக்கும் நிலையில் இளைஞர்கள் தங்களின் உணர்வுகளையும், அவர்களது உரிமைகளை பெற நடத்தும் போராட்டங்களையும் தன்னம்பிக்கையுடனும், தைரியங்களுடனும் எதிர்கொண்டு அவர்களது சக்தியை ஆக்கத்திற்கான முன்னேற்ற பாதையில் கொண்டு செல்ல வேண்டுமே தவிர இது போன்ற செயல்களை கையில் எடுப்பது தவறான முடிவாகும். எனவே இளைஞர்கள் தீக்குளிப்பு செயல்களில் ஈடுபடாமல் அமைதியான முறையில் துணிந்து தங்களது உரிமைகளை வெளிப்படுத்தி போராட்டங்களில் வெற்றி காண வேண்டும். உணர்வுகள் உன்னதமாக இருந்தாலும், உயிரை மாய்த்துக்கொள்ளுதல் எதற்கும் விடையல்ல.

மேலும் தீக்குளிப்பில் உயிரிழந்த விக்னேஷ் என்பவரை பிரிந்து வாடும் அவரது பெற்றோருக்கும், உறவினர்களுக்கும் மற்றும் நண்பர்களுக்கும் என் சார்பிலும் அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சியின் சார்பிலும் ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக் கொள்கிறேன்.

**ஆர்.சரத்குமார்** B.Sc
**நிறுவனத் தலைவர்**